**பள்ளிக் கல்வி இயக்ககம்**

**அனுப்புநர்,**
முனைவர். ச.கண்ணப்பன்,
இயக்குநர்,
பள்ளிக் கல்வி இயக்ககம்,
பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம்,
கல்லூரி சாலை, சென்னை–6

**பெறுநர்,**
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி
அலுவலர்கள்,

(மின் அஞ்சல் மூலமாக)

ந.க.எண். 040011/ஐ/இ1/2024 நாள் 12.07.2024

**பொருள் :** பள்ளிக் கல்வி – டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்த நாளான 05.09.2024 அன்று ஆசிரியர் தின விழா கொண்டாடுதல் – சிறந்த ஆசிரியர்களை தேர்ந்தெடுக்க ஏதுவாக EMIS இணைய தளம் மூலம் ஆசிரியர்களின் விவரங்கள் பதிவேற்றம் செய்திட மென்பொருள் உருவாக்குதல் – மாநில நல்லாசிரியர் விருதுக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் தங்கள் விவரங்களை EMIS இணைய தளம் மூலம் பதிவேற்றம் செய்ய தெரிவித்தல் – தொடர்பாக.

**பார்வை :** அரசாணை (1டி) எண்.220 பள்ளிக் கல்வி (பொது–II) துறை, நாள் 05.08.2022

ஃஃஃ

தமிழ்நாடு பள்ளிக் கல்வி துறையின் கீழ் இயங்கும் தொடக்க/நடுநிலை/ உயர்நிலை/ மேல்நிலை/ தனியார் பள்ளிகள்/ ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்/ சமூக பாதுகாப்புத்துறை / ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் 5–ம் தேதி முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்த நாளினை ஆசிரியர் தின விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவில் சிறந்த ஆசிரியர்களுக்கு மாநில அரசு விருதான டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டு வருகிறது. விருது பெறும் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தின விழாவில் ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ரொக்கப் பரிசும், ரூ.2,500/– மதிப்பிலான வெள்ளிப் பதக்கமும், பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பயணப்படியும் வழங்கப்பட்டு வருகிறது.

பார்வையில் காணும் அரசாணையில் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது பெறும் ஆசிரியர்களை தேர்வு செய்திட கீழ்கண்டவாறு 38 வருவாய் மாவட்டத்திற்கான விருதுகள் நிர்ணயம், மாவட்ட / மாநில குழு அமைத்தல், மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள், ஆகியவை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ii) மாவட்டத் தேர்வுக்குழு

| வ. எண் | பதவி | குழுவில் பதவி |
|---|---|---|
| 1 | முதன்மைக் கல்வி அலுவலர் | தலைவர் |
| 2 | முதல்வர், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம் | உறுப்பினர் |
| 3 | மாவட்டக் கல்வி அலுவலர்கள் | உறுப்பினர் |
| 4 | முதுநிலை வட்டாரக் கல்வி அலுவலர் | உறுப்பினர் |
| 5 | மேல்நிலைப் பள்ளி முதுநிலை தலைமையாசிரியர் | உறுப்பினர் |

iii) மாநிலத் தேர்வுக் குழு

| | | |
|---|---|---|
| 1. | பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6 | தலைவர் |
| 2. | இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை – 6 | உறுப்பினர் |
| 3. | தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை – 6 | உறுப்பினர் |
| 4. | அரசு தேர்வுகள் இயக்குநர், சென்னை – 6 | உறுப்பினர் |
| 5. | **தனியார் பள்ளிகள்** இயக்குநர், சென்னை – 6 | உறுப்பினர் |
| 6. | இயக்குநர், ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை, சென்னை – 8 (அல்லது) அன்னாரின் பிரதிநிதி | உறுப்பினர் |
| 7. | சென்னை மாநகராட்சி ஆணையாளர், சென்னை – 8 (அல்லது) அன்னாரின் பிரதிநிதி | உறுப்பினர் |
| 8. | முதல்வர், கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம், சைதாப்பேட்டை சென்னை – 15 | உறுப்பினர் |
| 9. | சிறப்பு ஆணையர் (ம) இயக்குநர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலம், சென்னை – 5 (அல்லது) அன்னாரின் பிரதிநிதி | உறுப்பினர் |
| 10 | இயக்குநர், சமூக பாதுகாப்புத்துறை, சென்னை – 10 (அல்லது) அன்னாரின் பிரதிநிதி | உறுப்பினர் |
| 11. | பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (இடைநிலை) சென்னை – 6 | உறுப்பினர் – செயலர் |

**விருது வழங்கிட ஆசிரியர்களைத் தேர்வு செய்திட பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் நெறிமுறைகள்.**

8. விருதிற்குத் தகுதியுள்ள ஆசிரியர்கள் உரிய படிவத்தில் விபரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்து தெரிவித்தல் வேண்டும்.
9. போதிய ஆசிரியர்கள் விண்ணப்பிக்கவில்லை என்று தெரிவிக்காமல், ஆய்வு அலுவலர்கள் தங்கள் பள்ளிகள் பார்வையின் போது கண்டறிந்த சிறந்த ஆசிரியர்களை பள்ளித் தலைமையாசிரியரிடம் அறிவுறுத்தி இணையதளத்தில் பதிவு செய்திடல் வேண்டும்.
10. முதன்மைக் கல்வி அலுவலர் தலைமையிலான குழு விண்ணப்பித்த அனைத்து ஆசிரியர்கள் செயல்பாடுகளை இணையதளத்தில் மதிப்பீடு செய்ய வேண்டும்.
11. விண்ணப்பித்த ஆசிரியர்கள் பணிப்பதிவேடுகள் மற்றும் பிற சான்றுகள் மாவட்ட அளவில் உரிய அலுவலர்களால் சரிபார்க்கப்பட வேண்டும்.

12. விண்ணப்பித்த ஆசிரியர்கள் மாவட்டத் தேர்வுக்குழுவின் முன் நேர்காணலுக்கு வரவழைக்கப்பட்டு, மதிப்பீடு செய்தல் வேண்டும்.
13. மாவட்டத்தேர்வுக்குழுவினர் தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களின் பட்டியல் / கருத்துருக்களை இணையவழியாக மதிப்பீடுகளின் அடிப்படையில் மாநிலத் தேர்வுக்குழுவின் பரிசீலனைக்கு ஆகஸ்டு மாதம் 14ஆம் தேதிக்குள் பரிந்துரை செய்யப்பட வேண்டும்.
14. மாநிலத் தேர்வுக்குழு மாவட்டக்குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில் இறுதி மதிப்பீடு செய்து தகுதியானவர்களின் பட்டியலைத் தயாரிக்க வேண்டும்.

## வழிகாட்டு நெறிமுறைகள் (GUIDELINES)

14. அனைத்து வகை ஆசிரியர்களும் குறைந்தபட்சம் 5 வருடங்கள் பணிபுரிந்திருக்க வேண்டும்.
15. மாநில பாட திட்டத்தின் கீழ் செயல்படும் அரசுப் பள்ளிகள் / ஆதிதிராவிட / பழங்குடியினர் நலத்துறை / பிற்பட்டோர் நலத்துறை / சமூக பாதுகாப்புத் துறை / நிதி உதவி பெறும் பள்ளிகள் / ஆங்கிலோ இந்திய பள்ளிகள் மற்றும் அயநிதி / மெட்ரிக் பள்ளிகள் ஆகிய மேலாண்மைகளின் கீழ் செயல்படும் தொடக்க / நடுநிலை / உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்துவகை ஆசிரியர்களும் விருதிற்குத் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.
16. இவ்விருது வகுப்பறையில் ஆசிரியர்களுக்கு மட்டுமே கற்பித்தல் ஈடுபடும் வழங்கப்படும். அலுவலகங்களில் பணியில் நிர்வாகப்பணி மேற்கொள்ளும் ஆசிரியர்கள் விண்ணப்பிக்ககூடாது.
17. கல்வியாண்டில் செப்டம்பர் 30ஆம் தேதிக்கு முன் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற ஆசிரியர்களைப் பரிந்துரை செய்யக்கூடாது. ஆசிரியர்கள் கல்வியாண்டில் குறைந்தது 4 மாதங்கள் (செப்டம்பர் 30ஆம் தேதிவரை –in Regular Service) பணிபுரிந்தவராக இருத்தல் வேண்டும். (மறுநியமன காலத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளக்கூடாது).
18. பரிந்துரைக்கப்படும் ஆசிரியர்கள் எவ்விதக் குற்றச்சாட்டிற்கும், ஒழுங்கு நடவடிக்கைக்கும் உட்படாதவராகவும், பொதுவாழ்வில் தூய்மையானவராகவும், பொது சேவைகளில் நாட்டம் கொண்டவராகவும், பள்ளி மாணவர்களின் இடைநிற்றலைக் குறைத்தல், பள்ளி மாணவர் சேர்க்கை, தேர்வில் தேர்ச்சி சதவீதத்தை உயர்த்துதல், கல்வித்தரத்தில் பின்தங்கிய மாணவர்களின் தரத்தை முன்னேற்ற பாடுபடுபவராகவும் இருத்தல் வேண்டும்.
19. அரசியலில் பங்கு பெற்று அரசியல் கட்சிகளுடன் தொடர்புடைய ஆசிரியர்களின் பெயர்கள் கண்டிப்பாகப் பரிந்துரைக்கப்படக் கூடாது.
20. கல்வியினை வணிகரீதியாகக் கருதி செயல்படும் ஆசிரியர்களையும், நடத்தை விதிகளுக்கு முரணாக இருக்கும் ஆசிரியர்களையும் இவ்விருதிற்குத் தகுதியற்றவர்களாகக் கருத்தப்பட வேண்டும்.
21. சிறந்த முறையில் பணிபுரியும் தமிழாசிரியர்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர்களான ஓவிய ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், கைத்தொழில் ஆசிரியர்கள், இசை ஆசிரியர்கள் மற்றும் மாற்றுத் திறன் ஆசிரியர்களில் தகுதியானவர்களையும் விருதிற்குப் பரிந்துரைக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டும்.

22. பரிந்துரைக்கப்படும் ஆசிரியர்களின் கருத்துருக்கள், பெயர்பட்டியலினை மாவட்டத் தேர்வுக்குழுத் தலைவர் தமது சொந்தப் பொறுப்பில் வைத்துக் கொள்ள வேண்டும். தேர்வுக்குழு உறுப்பினர்களும் இது தொடர்பாக மந்தணம் காத்திடல் வேண்டும்.

23. டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதிற்காக வரையரை செய்யப்பட்ட படிவத்தில் மட்டுமே ஆசிரியர்களின் இணையவழியாக EMIS தளத்தில் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.

24. ஆகஸ்டு மாதம் 14ஆம் தேதிக்குள் முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட விருதுகளின் எண்ணிக்கை அடிப்படையில் பட்டியல் தயார் செய்து 1:2 என்ற வீதத்தில் தேர்வு செய்து, நல்லாசிரியர் விருதிற்கான ஆசிரியர்களின் கருத்துருக்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.

25. வருவாய் மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களைத் தேர்வு செய்து பரிந்துரை செய்யப்படும் பொழுது, அனைத்து வகை ஆசிரியர்கள் மற்றும் அனைத்துப் பள்ளிகளையும் உள்ளடக்கியதாக உள்ளதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

26. மாநில அரசால் பரிந்துரைக்கப்பட்டு தேசிய விருது பெற்ற எந்த ஆசிரியரையும் பரிந்துரை செய்தல் கூடாது.

எனவே எதிர்வரும் 05.09.2024 அன்று நடைபெறும் ஆசிரியர் தின விழாவில் சிறந்த ஆசிரியர்களை தேர்வு செய்திட ஏதுவாக மேற்கண்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி மாதிரி விண்ணப்பப் படிவத்தினை அடிப்படையாக கொண்டு EMIS இணைய தளம் மூலம் ஆசிரியர்களின் விவரங்கள் பதிவேற்றம் செய்திட புதிய மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய விவரங்கள் இத்துடன் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள **தொடக்க/நடுநிலை/ உயர்நிலை/ மேல்நிலை/ தனியார் பள்ளிகள்/ ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள்/ சமூக பாதுகாப்புத்துறை / ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில்** மாநில நல்லாசிரியர் விருதுக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் தங்களின் விவரங்களை EMIS இணைய தளம் மூலம் 16.07.2024 அன்று முதல் 24.07.2024–க்குள் பதிவேற்றம் செய்ய அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் தக்க அறிவுரை வழங்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர்.

12/7/24

12/7/2024

இணைப்பு

மாதிரி விண்ணப்ப படிவம்

| டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது | | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | மாவட்டம் | தொடக்க/ நடுநிலை | உயர்நிலை/ மேல்நிலை | மொத்தம் |
| 1 | சென்னை | 6 | 6 | 12 |
| 2 | திருவள்ளூர் | 6 | 6 | 12 |
| 3 | காஞ்சிபுரம் | 4 | 4 | 8 |
| 4 | செங்கல்பட்டு | 4 | 4 | 8 |
| 5 | வேலூர் | 4 | 4 | 8 |
| 6 | இராணிப்பேட்டை | 4 | 4 | 8 |
| 7 | திருப்பத்தூர் | 4 | 4 | 8 |
| 8 | திருவண்ணாமலை | 6 | 6 | 12 |
| 9 | விழுப்புரம் | 4 | 4 | 8 |
| 10 | கள்ளக்குறிச்சி | 4 | 4 | 8 |
| 11 | கடலூர் | 5 | 5 | 10 |
| 12 | நாகப்பட்டினம் | 3 | 3 | 6 |
| 13 | திருவாரூர் | 4 | 4 | 8 |
| 14 | தஞ்சாவூர் | 5 | 5 | 10 |
| 15 | பெரம்பலூர் | 3 | 3 | 6 |
| 16 | அரியலூர் | 3 | 3 | 6 |
| 17 | திருச்சிராப்பள்ளி | 6 | 6 | 12 |
| 18 | கரூர் | 3 | 3 | 6 |
| 19 | புதுக்கோட்டை | 5 | 5 | 10 |
| 20 | சிவகங்கை | 4 | 4 | 8 |
| 21 | இராமநாதபுரம் | 5 | 5 | 10 |
| 22 | திண்டுக்கல் | 5 | 5 | 10 |
| 23 | மதுரை | 6 | 6 | 12 |
| 24 | தேனி | 4 | 4 | 8 |
| 25 | சேலம் | 6 | 6 | 12 |
| 26 | நாமக்கல் | 4 | 4 | 8 |
| 27 | தருமபுரி | 4 | 4 | 8 |
| 28 | கிருஷ்ணகிரி | 4 | 4 | 8 |
| 29 | ஈரோடு | 5 | 5 | 10 |
| 30 | கோயம்புத்தூர் | 6 | 6 | 12 |
| 31 | திருப்பூர் | 5 | 5 | 10 |
| 32 | நீலகிரி | 4 | 4 | 8 |
| 33 | விருதுநகர் | 5 | 5 | 10 |
| 34 | தூத்துக்குடி | 5 | 5 | 10 |
| 35 | திருநெல்வேலி | 4 | 4 | 8 |
| 36 | தென்காசி | 4 | 4 | 8 |
| 37 | கன்னியாகுமரி | 5 | 5 | 10 |
| 38 | மயிலாடுதுறை | 3 | 3 | 6 |
| | மொத்தம் | 171 | 171 | 342 |
| | | | மெட்ரிக் பள்ளிகள்(மாவட்டத்திற்கு 1 ஆசிரியர்) | 38 |
| | | | ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் | 2 |
| | | | சமூகப் பாதுகாப்புத் துறை பள்ளிகள் | 2 |
| | | | மாற்றுத் திறனாளி ஆசிரியர்கள் | 2 |
| | | | மொத்தம் | 386 |

## Dr.Radhkrishnan Award Application Form

**Upload the Recent Pass Port Size photo**

| SI.NO | | Field Names | | |
|---|---|---|---|---|
| 1 | | வருவாய் மாவட்டத்தின் பெயர் | | |
| 2 | | கல்வி மாவட்டத்தின் பெயர் | | |
| 3 | | ஆசிரியர் பெயர்( திரு/ திருமதி/ செல்வி) | | |
| | | தமிழ்( முன்னெழுத்து பெயரின் முன்) எ.கா (ப .அனிதா ) | | |
| | | ஆங்கிலம்(Initial before name) Ex. P Anitha | | |
| | | EMIS ID | | |
| | | ஆசிரியரின் பதவி | | |
| | | பிறந்த தேதி | dd/mm/yyyy | |
| | | வயது | | |
| | | பணியிலிருந்து ஓய்வு பெறும் நாள் | dd/mm/yyyy | |
| | | ஆசிரியராகப் பணியில் சேர்ந்த நாள் | | |
| | | இனம் | Male / Female | |
| | | தந்தை/ கணவர் பெயர் | | |
| 4 | | **ஆசிரியர் பணிபுரியும் பள்ளியின் பெயர்** | | |
| | | பள்ளியின் பெயர் | | |
| | | தெரு பெயர் | | |
| | | கிராமம் /வட்டாரம்/மாவட்டம் /அஞ்சல் குறியீட்டு எண் | | |
| 5 | | **ஆசிரியரின் கல்வி தகுதிகள்** | | |
| | | பொதுக் கல்வித் தகுதி | Auto fetch | |
| | | தொழிற்கல்வித் தகுதி | | Provide ADD provision |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிற தகுதிகள் | | |
| | | Quali 1 | Upload Docum | Provide ADD provision |
| | | Quali 2 | Upload Docum | |
| | | | | |
| 6 | | **Additional Qualification After Joining the Service** | | |
| | | Qualification Name | Upload Certificate | Provide ADD provision |
| | | | | |
| | | | | |
| 7 | | கல்வித் பணிக்காலம் (வகுப்பறையில் மாணவர்களுக்கு கல்வி கற்பித்த நாட்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்) | | |
| | | கல்வி பணிக்காலத்தில் கல்வி கற்பித்த நாட்களின் பதிவுகள் விவரம் -Tabular Format | | Provide ADD provision |
| | | **Enter School UDISE** | | |
| | | **School Name/ School Type / Management / District** | | |
| | | **பதவி** | | |
| | | **வகுப்பறையில் கல்வி கற்பித்த நாட்கள் முதல் முடிய** | | |
| | | **மொத்த கால அளவு (நாள் /மாதம் / ஆண்டு)** | | |
| | | | | |
| 8 | | கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆசிரியர் வருகை புரிந்த நாட்களின் சதவீதம் | | |
| | | In Tabular Form<br>கல்வியாண்டு<br>வேலைநாட்கள்<br>வருகை நாட்கள்<br>வருகை சதவீதம் | | |
| | | | | |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | | கடந்த 5 ஆண்டுகளில் ஆசிரியர் கற்பித்த/ கற்பிக்கும் வகுப்புகள் விவரம் | | auto fetch the last five years details from the previous data |
| | | 2019-2020 | | |
| | | 2020-2021 | | |
| | | 2021-2022 | | |
| | | 2022-2023 | | |
| | | 2023-2024 | | |
| | | 2024-2025 | | |
| | | | | |
| 9 a | | ஆசிரியர் தன் குறிப்பு( 250 வார்த்தைகளுக்கு மிகாமல்) | Input | |
| 10 | | ஆசிரியர் பெற்ற பயிற்சிகள் விவரம்: | Upload Photo/Certificate | Enable Add provision |
| | | பயிற்சியின் பெயர் | | |
| 10 a | | ஆசிரியர் பயிற்சியில் தவறாமல் கலந்து கொள்கிறாரா? | | |
| | | Yes / NO ---- if yes | Upload the document from Drawing Officers ( BEO / DEO) | |
| | | | | |
| 11 | | கடந்த 5 ஆண்டுகளில் தொடக்க/ நடுநிலை/ உயர்நிலை/ மேல்நிலை பள்ளிகளில் ஆசிரியராக/ தலைமை ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் பள்ளி மாணவர் சேர்க்கைக்காக/ இடைநிற்றலை தவிர்க்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மற்றும் மாணவர் சேர்க்கை அதிகரித்ததுள்ள விவரம் | | |
| | | 2019-2020 | Activities carried out by the teacher on increasing student's count and reducing dropouts | No of newly enrolled students in the year |
| | | 2020-2021 | Upload the PDF document | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2021-2022 | Upload the PDF document | |
| | | 2022-2023 | Upload the PDF document | |
| | | 2023-2024 | Upload the PDF document | |
| | | 2024-2025 | Upload the PDF document | |
| | | | | |
| 12 | Only for the BT Assistant and PGT | கடந்த 5 ஆண்டுகளில் 10,11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பொதுத்தேர்வில் மாணவர்கள் பெற்ற தேர்ச்சி விழுக்காடு ஆண்டுவாரியாக- For each subject year wise | | |
| | | 2019-2020<br>2020-2021<br>2021-2022<br>2022-2023<br>2023-2024<br>2024-2025 | In Tabular Form:<br>கல்வியாண்டு<br>பாடம்<br>10 ம் வகுப்பு தேர்ச்சி %<br>11 ம் வகுப்பு தேர்ச்சி %<br>12 ம் வகுப்பு தேர்ச்சி % | |
| | | | | |
| 12 | PET | உடற்கல்வி இயக்குநர்/ஆசிரியர் என்ற நிலையில் மாவட்ட / மண்டல /மாநில /தேசிய/சர்வதேச/அளவில்மாணவர்கள் வெற்றி பெற்ற சாதனைகள் விவரம் (கடந்த 5 ஆண்டுகளில்) | Year /Sports name/ student's name/EMIS ID/ Students' grade / Level of achievement / Document or certificate | Enable Add provision |
| 12 | Special Teachers | சிறப்பாசிரியர் என்ற நிலையில் அவர் மூலம் சாதனைகள் படைத்த மாணவர்களின் வெற்றி விவரங்கள் (கடந்த 5 ஆண்டுகளில்) | Year/Students name/Student EMIS ID/ Student's Grade /Type of achievement/Document or certificate | Enable Add provision |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | | பள்ளியின் கட்டமைப்பு மேம்பாட்டுக்காக /ஆசிரியர்/தலைமையாசிரியர் மேற்கொண்ட தனிப்பட்ட முயற்சிகளின் விவரம்(300 வார்த்தைகளுக்கு மிகாமல் ) | Upload PDF document | Video Upload |
| 14 | | தகவல் தொழில் நுட்பத்தினை பயன்படுத்தி தன்னால் கண்டறியப்பட்ட தொழில்நுட்ப உபகரணங்கள் மூலம் மாணவர்கள் ஊக்கத்துடனும், ஆர்வத்துடனும் கல்வி கற்க நடவடிக்கை மேற்கொண்ட விவரம் மற்றும் அதனால் மாணவர்கள் அடைந்த வெற்றிகள் | Upload PDF document & Video Link | Video Upload |
| | | | | |
| 15 | | பாடத்திட்டம் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகள் மூலம் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு ஆசிரியர்கள் ஆற்றிய பங்களிப்பின் விவரம் | Upload PDF document | Video Upload |
| 16 | | ஆசிரியர் என்ற நிலையில் மத்திய அரசு/ மாநில அரசு/ மாவட்ட பொது அமைப்புகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் இருந்து விருதுகள் ஏதேனும் பெற்றுள்ளாரா? அதன் விவரங்களை குறிப்பிடவும் | Award Name/ Certificate or document<br>Dropdown<br>Central Govt/ State Govt/ District Org/NGOs | Enable add provision |
| 17 | | மக்கள்தொகைக் கணக்கெடுப்பு தேர்தல் பணி மற்றும் பிற அரசு சார்ந்த பணிகளில் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு தண்டனை ஏதேனும் ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ளதா?<br>If Yes, Upload the documnet | ஆம்/ இல்லை | Upload the documnet |

| | | | | |
|---|---|---|---|---|
| 18 a | Only BT ,and PGT | அரசு பொது தேர்வு பணியில் தலைமை ஆசிரியர் / ஆசிரியரின் பங்களிப்பு If yes | ஆம்/ இல்லை | Give provision to selecct the year and upload the order copy |
| | Only BT ,and PGT | 2019-2020 if yes, upload the order copy | ஆம்/ இல்லை | |
| 18 b | Only BT ,and PGT | தேர்வுப் பணியில் துறையால் தண்டனை பெற்றவரா ? | ஆம்/ இல்லை | |
| | Only BT ,and PGT | ஆம் எனில் அதன் விவரம் | Upload PDF document | |
| | | | | |
| 18 b | Only PET and Special Teachers | ஏதேனும் போட்டிகளில் பங்கேற்ற விபரங்கள் | | |
| | | போட்டியின் பெயர் | Upload the Certificate | |
| 19 | | கடந்த 5 ஆண்டுகளில்( சர்வதேச/ தேசிய இதழ்களில் உள்ள ஆய்வுக்கட்டுரைகள்/ கட்டுரைகள்( ISSN உடன்) , புத்தகங்கள் ( ISBN) வெளியீடு | ஆம்/ இல்லை | Give provision to upload the pdf and paste the link |
| | | If yes upload the document link /Pdf | | |
| | | | | |
| 20 | | கடந்த 3 ஆண்டுகளின் சிறப்பு அடைவுகள் (Upload the teacher's Lesson plan / Diary) | | |
| | | 2021-22 | Upload pdf document | |
| | | 2022-23 | Upload pdf document | |
| | | 2023-24 | Upload pdf document | |
| | | | | |
| 21 | | SCERT வாரியங்கள் அல்லது NCERT க்கான மின்-உள்ளடக்கங்கள் ,பாடப்புத்தகங்கள் , ஆசிரியர் கையேடுகளின் மேம்பாடு | | Upload pdf document |
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 22 | | தொழில்நுட்பத்தின் பயன்பாடு , புதுமை கற்பித்தல் மற்றும் சிறந்த கற்றல் ஆகியவற்றின் பங்கு | | |
| | | | | |
| 23 | | Use of ICT to innovate and transform cost-effective use of content creation to enrich classroom learning | | Upload pdf document |
| | | | | |
| 24 | | மாணவர்களுக்கு கல்வியானது தொடர்புபடுத்தக்கூடியது, பொருத்தமானது ,சுவாரஸ்யமானது மற்றும் பயனுள்ளது என்பதை உறுதி செய்வதற்காக ஆசிரியரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை குறிப்பிடவும். எடுத்துக்காட்டுகள்: கதை சொல்லுதல் கலைகள் விளையாட்டுகள் விளையாட்டுகள் போன்ற மகிழ்ச்சியான செயல்பாடுகளைப் பயன்படுத்துதல் | Upload Pdf document | Upload the Video link |
| | | | | |
| 25 | Only for SGT | பள்ளியில் அடிப்படை கல்வியறிவு மற்றும் எண்ணியல் திறன்களை மேம்படுத்த பல்வேறு உத்திகளை ஏற்றுக்கொள்வதை உள்ளடக்கிய எண்ணும் எழுத்தும் கற்பித்தல் நடவடிக்கைகளில் பொருத்தமான கற்பித்தல் அணுகுமுறைகளின் வளர்ச்சி மற்றும் பயன்பாடு பற்றி குறிப்பிடவும் | | Input |

| | | | | |
|---|---|---|---|---|
| 26 | | கற்றலுக்கு உகந்த சூழலை உருவாக்க வகுப்பறையில் கற்பித்தல் நடைமுறைகளை மேம்படுத்துதல், மாணவர்களுக்கான செறிவூட்டல் நடவடிக்கைகளைப் பயன்படுத்துதல் ,தலைப்பை நிஜ வாழ்க்கைச் சூழ்நிலையுடன் தொடர்புபடுத்துதல், திறந்த விவாதங்களை ஊக்குவித்தல் போன்ற செயல்பாடுகளில் மாணவர்களை ஈடுபட வைக்க ஆசிரியர் மேற்கொண்ட செயல்பாடுகளை குறிப்பிடவும். | Upload Pdf document | Upload the Video link |
| 27 | | பள்ளி கல்வி துறையால் வழங்கப்பட்ட கற்றல் கற்பித்தல் பொருட்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள் (Manakeni , Teacher Hand Book , Hitech Lab , Language Lab , Library books...) | Upload Pdf document | Upload the Video link |
| 28 | | ஆசிரியரால் உருவாக்கப்பட்ட / கண்டுபிடிக்கப்பட்ட கற்றல் கற்பித்தல் பொருட்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள் | Upload Pdf document | Upload the Video link |
| 29 | | BRP or DRP or State or Union Schemes - போன்றவற்றில் பங்கு பெற்ற விபரம் | Upload Pdf document | Upload the Video link |
| 30 | | மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்காக வகுப்பறை சுவர்களுக்கு அப்பால் வழிகாட்டுதல் மற்றும் வளர்ப்பை மேற்கொள்ள ஆசிரியரால் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள் | Upload Pdf document | Upload the Video link |
| 31 | | கூடுதல் மற்றும் இணை பாடதிட்ட செயல்பாடுகளினால் ஏற்பட்ட தாக்கத்தை குறிப்பிடவும் (Annual Day/Debate /Quiz Competition ...) | Upload Pdf document | Upload the Video link |
| 32 | | குழந்தைகளிடையே சமூக விழிப்புணர்வை பரப்புவதற்கு ஆசிரியர் செய்த பணி குறிப்பாக ஊட்டச்சத்து கழிப்பறை மற்றும் மாதவிடாய் சுகாதாரம் குழந்தைத்திருமணம் தாழ்த்தப்பட்ட குழந்தைகளை மேம்படுத்துதல் போன்ற சமூக உணர்வுப் பிரச்சினைகளில் | | Upload pdf document |

| | | | | |
|---|---|---|---|---|
| 33 | | சமூகத்தில் பங்குதாரர்களை திரட்டி பள்ளி மேலாண்மை குழு சமூக தணிக்கை மற்றும் பெற்றோர்கள் மூலம் வளங்களை திரட்டுதல் போன்ற பல்வேறு பள்ளி மேம்பாட்டு நடவடிக்கைகளில் அவர்களை அர்த்தமுள்ள வகையில் ஈடுபடுத்துதல் மற்றும் பழைய மாணவர்கள் பள்ளிக்கு பங்களிக்க செய்து உட்கட்டமைப்பு வசதிகள் , கணினிகள் , புத்தகங்கள் போன்றவைகளை பெறுதல் - இவற்றில் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகளை குறிப்பிடுக | Upload Pdf document | Upload the Video link |
| 34 | | தேசிய ஒருமைப்பாட்டை ஊக்குவிக்க ஆசிரியர்களால் மேற்கொள்ள பட்ட செயல்பாடுகள் (NSS / NCC / Scout ) | | |
| 35 | | ஆசிரியர் எந்த புகாரும் இல்லாமல் தவறாமல் பள்ளிக்குச் சொல்கிறாரா? | | |
| 36 | | **பணியாளர் உறுதி சான்றிதழ்** | Upload PDF signed copy received from BEO and DEO(S) | |
| 37 | | ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை என்பதற்கான சான்றிதழ் | Upload PDF signed copy received from BEO and DEO(S) | |
| 38 | | குற்றவியல் வழக்கு எதுவும் இல்லை? | | |
| | | Yes / No if Yes | Upload the PDF | |